(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** **22 UTM 510**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2024**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 50**

**ஐந்தாம் பருவம்** **நேரம் : 3 மணி**

**பகுதி – 3**

**இலக்கணம் - யாப்பு, அணி**

**பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. *தேமாந் தண்ணிழல் என்பது* யாது?

   *அ) நேர் நேர் நிரை நிரை ஆ) நேர் நிரை நிரை நிரை*

   *இ) நேர் நேர் நேர் நிரை ஈ) நிரை நேர் நேர் நிரை*

2. *வெண்டளை இரண்டும்வர அமைவது* எது?

   *அ) ஏந்திசைச் செப்பல் ஆ) ஏந்திசை அகவல்*

   *இ) ஒழுகிசை அகவல் ஈ) ஒழுகிசைச் செப்பல்*

3. *உலக ஒழுக்கு இறவாது உயர்புகழ்*

   *அ) உதாரம் ஆ) ஒழுகிசை இ) சமநிலை ஈ) காந்தம்*

4. *ஒரு பொருளைக் குறித்த பெயர் இரண்டு மாறுபட்ட குணங்களோடு இயைந்து பொருள்படுவது* எது?

   *அ) மாலாத் தீவகம் ஆ) சிலோடைத் தீவகம் இ) விருத்த த் தீவகம் ஈ) உவமைத் தீவகம்*

5. *ஒழிப்பணி என்பது* யாது?

   *அ) உதாத்தவணி ஆ) அவநுதியணி இ) விலக்கணி ஈ) சமாயிதவணி*

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. *கூழை என்பது* யாது?

7. *‘தூங்கலோசை’ என்பது* யாது?

8. *‘வலி’ என்பது* என்ன?

9. *‘இலேசம்’ என்பது* யாது?

10. *பொருள் தருக –‘சங்கீரணவணி’*

**பகுதி – ஆ** (5 x 3 = 15 )

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** **(K3)**

11. அ) *சீர் வகைகளின் பெயர்ப் பொருத்தப்பாட்டினைச் சுட்டுக.*

(அல்லது)

ஆ) *யாப்பருங்கலக்காரிகையின் அடிக்கோட்பாடு நான்கு பாக்களுக்குப் பொருந்தும் பாங்கினைச் சான்றுடன் விவரி.*

**(த.பி.பா.)**

12. அ) குறள்வெண் செந்துறை – குறள்தாழிசை வேறுபடுத்துக.

(அல்லது)

ஆ) கலிப்பா உறுப்புகளின் பெயரமைவு குறித்து விவாதிக்க.

13. அ) கௌடநெறி தழுவிநிற்கும் வைதருப்ப நெறியின் குணங்களை எழுதுக.

(அல்லது)

ஆ) தொகை உருவகம் - விரி உருவகம் - சான்றுடன் வேறுபடுத்துக.

14. அ) ஓட்டணியின், அடையும் பொருள் அயல்பட மொழிதலையும், அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதலையும் வேறுபடுத்துக.

(அல்லது)

ஆ) அயற்காரண விபாவனை - இயல்பு விபாவனை சான்றுதந்து வேறுபடுத்துக.

15. அ) "தன்னுடைய ஆற்றறலைத் தானே எடுத்துக்கூறுவது தன்மேம்பாட்டுரையணி'' எனும் கூற்றினைச் சான்றுடன் நிறுவுக.

(அல்லது)

ஆ) பரிவருத்தனையணியைச் சான்றுடன் விவரி.

பகுதி – இ (5 x 5 = 25)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.** (K4& K5)

16. அ) யாப்பருங்கலக்காரிகையின் எழுத்துக் கோட்பாட்டினை ஆராய்க.

(அல்லது)

ஆ) அமிர்த்தசாகரரின் 'முதற்தொடையின்' கடைநான்கு கூறுகளைச் சான்றுடன் கட்டுரைக்க.

17. அ) 'வஞ்சிப்பா' குறித்த யாப்பியல் கோட்பாடுகளைச் சான்றுடன் தருவி.

(அல்லது)

ஆ) ''ஆசிரியப்பாவும் வெண்பாவும் கலந்ததே மருட்பா'' எனும் கூற்றை யாப்பருங்காலக் காரிகையின்வழி நிறுவுக.

18. அ) பெருங்காப்பிய இலக்கணத்தை நீங்கள் அறிந்த காப்பியங்களின் கூறுகளோடு பொருத்திக் காட்டுக.

(அல்லது)

ஆ) தீவக அணி விளக்கொளிபோல் பொருள்விளக்கும் பாங்கினைச் சான்றுடன் விவரி.

19. அ) வேற்றுப்பொருள் வைப்பணி மற்றும் அதன் வகைகளைச் சான்றுடன் கட்டுரைக்க.

(அல்லது)

ஆ) அதிசயவணியையும் அதன் வகைகளையும் சான்றுடன் கட்டுரைக்க.

20. அ) சுவையணியையும் அதன் வகைகளையும் சான்றுடன் விவரி.

(அல்லது)

ஆ) காலம், கனவு எனும் தலைப்புகளில் இரண்டு வெண்பாக்களைப் புனைக.

**********************

*ETHICAL PAPER*